Original Suit No.3/2009 நாள்: 24.06.2022

வா.சா1 அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 31 முதல் 37 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் 31, 32 ,33 பிரதிவாதிகள் மற்றும் ஒரு கே.எஸ் முகமது அலி ஆகியோர் தாவா ஏ அட்டவணை சொத்தில் உங்களுக்கு பாத்தியப்பட்ட 4ல் 1 பாகத்தையும் 8 ம்பிரதிவாதிக்கு தாவா ஏ அட்டவணை சொத்தில் பாத்தியப்பட்ட 18 செண்ட் நிலத்தையும் கடந்த 22.08.2016ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்று அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அதே போல் இவ்வழக்கின் 31, 32, 33ம் பிரதிவாதிகள் மற்றும் ஒரு கே.எஸ் முகமது அலி ஆகியோர் தாவா ஏ அட்டவணை சொத்தில் இந்த வழக்கின் 1,3,5,14 ம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பங்கு முழுவதையும் மற்றும் இவ்வழக்கின் 18ம் பிரதிவாதிக்கு தாவா ஏ அட்டவணை சொத்தில் பாத்தியப்பட்ட 19 செண்ட் நிலத்தையும் கடந்த 23.08.2016ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். இந்த வழகின் 31, 32,33 ம் பிரதிவாதிகள் மற்றும் கே.எஸ்,முகமது அலி ஆகியோர் இவ்வழக்கின் பி அட்டவணை 4வது அயிட்ட சொத்தில் எனக்கும், 1,3,5,8,16,17 பிரதிவாதிககளுக்கு பாத்தியப்பட்ட பாகத்தை கடந்த 11.07.2017ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்று அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரைய தேதிக்கு பின்னிட்டு முகமது அலி இறந்துவிட்டார். அதற்கு பின்னிட்டு மேற்படி 3 கிரைய பத்திரங்களில் மேற்படி கே.எஸ் முகமது அலிக்கு பாத்யிப்பட்ட சொத்தை பொறுத்தும் இதர சொத்துக்களை பொறுத்தும் கடந்த 23.08.2017ம் தேதியன்று ஒரு பாகப்பிரிவினை செய்து கொண்டனர் என்றால் ஆமாம். மேற்படி கே.எஸ் முகமது அலிக்கு பாத்தியப்பட்ட பாகம் இவ்வழக்கின் 34 முதல் 37 பிரதிவாதிகளுக்கு மேற்படி பாகப்பத்திரத்தில் ஒதுக்கப்பட்டு அவர்களும் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு

அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்துசெய்தார்.
(ஒம்/- R.கோகுல் முருகன்),
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.